முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 165/2022

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரங்கநாதன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பழனிச்சாமி | கிராமம் | : | பொம்மநாயக்கன் பாளையம் |
| வயது | : | 47 | தாலூக்கா | : | |
| நாள் | : | 22-01-2026 | மாவட்டம் | : | திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. வாதி என்ன பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதிக்கு பாத்தியப்பட்ட தாவாச் சொத்துக்குள் அத்துமீறி நுழையக்கூடாது என தடை உத்தரவு கோரி தாக்கல் செய்துள்ளார். தாவாச் சொத்து வாதியின் பெற்றோர்கள் பெயரில் பதிவாகி உள்ளது என்றால் சரிதான். பதிவு ஆவணத்தில் கண்டுள்ள 5751 சதுரடி அளவுள்ள இடத்துக்குள் நுழையக்கூடாது என தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனதுமுதல் விசாரணை வாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்கள் தவறானது, அந்த இடம் ரிசர்வ் செய்யப்பட்ட இடம் அங்கு கோவில் உள்ளதாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல. விநாயகர் கோவில் உள்ளது. அங்கு விநாயகர் கோவில் உள்ளது என்பதைக் காட்ட வருவாய் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.01.22 17:29:47 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.